## பிப்ரவரி - 1

**"நீங்கள் வலது புறமாய்ச் சாயும் போதும், இடது புறமாய்ச் சாயும் போதும் வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்"**

**- ஏசா 30 : 21**

நாம் போய்க்கொண்டிருக்கும் போது கிளை ரோடுகள் சந்திக்கும் இடத்திற்கு வந்தோமானால், அதாவது நமது அனுபவத்தின் சில நெருக்கடிகளை சந்திப்போமானால், அப்பொழுது, வலதுபுறம் திரும்ப வேண்டுமா, அல்லது இடதுபுறம் திரும்ப வேண்டுமா என்று தெரியாதிருந்தால், நாம் உடனே நின்று விட்டு இந்த சத்தத்தைத் கேட்க வேண்டும். வேறு விதமாகச் சொல்ல வேண்டுமானால், நாம் உடனே கர்த்தரின் வார்த்தைக்கு திரும்ப வேண்டும். அதன் கற்பனைகளையும், தத்துவங்களையும் குழப்பிக் கொண்டிருக்கும் விஷயத்திற்கு ஆதரவான (வேதாகம) உதாரணங்களையும் சிந்திப்பதைக் கொண்டு கர்த்தருடைய சித்தத்தை அறிய நாட வேண்டும். அதே சமயத்தில் அவரது ஆவியின் நடத்துதலுக்காக மன்றாடி, அன்பு கொள்ளும், கீழ்படிகிற நம்பிக்கையுள்ள மனோநிலைக்கு மனதைத் திருப்ப முயற்சி செய்ய வேண்டும்.

**- Z '95, 6 (R 1753).**

நமக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தை பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டு வேதாகம போதனைகளாகும். இந்த போதனைகள் ஜீவியத்தின் ஒவ்வொரு நிலைமைக்கும் அனுபவத்திற்கும் உபயோகப்படக் கூடியவைகள். ஆகையால் இந்த அதிசயமான போதனைகள் ஞானம், நீதி, அன்பு வல்லமை இவைகளின் வழிகளில் நமது நடைகளை நேராக நடத்தும் என்ற உறுதியோடு, ஜீவியத்தின் பாதையில் நாம் படிப்பினைக்காக் இவைகளை (போதனைகளை கவனித்துப் பார்க்க வேண்டும்.)

**-P '34, 15.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

லூக் 11:28; 8:21; மத் 7:21-29; யாக் 1:21-27; கொலொ 2:2; 3:16; எபி 1:1,2; ஏசா 66:4; எபே 5:26; 1தெச 2:13; 2தெச 2:14,15; 2தீமோ 3:15-17; எபி 2:1-3; 4:2,12; 1பேது 2:2; 2பேது 3:12; 1யோ 2:14; யூதா 17; வெளி 1:3; எபி 6:4-6; 10:26-29; 2பேது 2:20-22;

**கோபுர வாசிப்பு :** Z '11, 359 (R 4881).

**வினாக்கள் :** இந்த வசனத்தின்படி இந்த வாரத்தில் என் அனுபவங்கள் எவை? எனக்கு உதவியாக அல்லது இடையூறாக அவற்றில் இருந்தவை எவை? ஏற்பட்ட பலன்கள் எவை?